## டிசம்பர் - 20

**"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." - 2தீமோ 2.15.**

"ஊக்கமாய்க் கற்றுக்கொள்." என்ற சொற்றொடரில் அதிக முக்கியத்துவம் இருக்கிறது. படிப்பில் ஆர்வமுள்ளவன் மாத்திரமே தெய்வீக அனுமதியையும் அங்கீகாரத்தையும் பெறத்தக்கதாக இடுக்கமான பாதையைக்கண்டு கொள்ளுகிறான். உத்தமனாக நிறுத்தும்படி ஊக்கமாகக் கற்றுக்கொள், அந்தப் போதனைக்கு இணக்கமாக உன்னுடைய நடத்தையின் போக்கை அனுஷ்டிக்க ஊக்கமாய்க் கற்றுக்கொள். சீயோனின் சமாதானத்தையும், செழுமையையும், எப்படி விருத்தி செய்ய வேண்டுமென்றும், எப்படி உன்னையும் மற்றவர்களையும் தப்பிதமான போதனையின் கணைகளிலிருந்தும்,தீமையின் உலகப்பிரகாரமான ஆவியின் விஷயத்திலிருந்தும் எப்படிப் பாதுகாப்புப் பெறவேண்டுமென்றும் ஊக்கமாய்க் கற்றுக்கொள். சிலுவையின் உண்மையான போர்சேவனின் கடமைகளை எவ்வாறு செய்வதென்று ஊக்கமாய்க் கற்றுக்கொள். இவைகள் காணப்படுகிற விதமாக முக்கியமில்லாதவையாகவும் மிகவும் தைரியமான, மிகச்சிறப்பான செயல்களாகவும் இருக்கின்றன. **- Z 02, 318 (3096).**

தேவனுடைய பிள்ளைகள், விஷேசமாக போதகராக இருக்கிறவர்கள் தங்களிடம் சமர்ப்பிக்கப்படுகிற எந்தக் கருத்துக்களையும் குழப்பமான மனதுடனும், ஆட்சேபிக்காத மனதுடனும் ஏற்றுக் கொள்ளக்கூடாது. அவைகள் தங்களுடனும், வேதகமப்பகுதிகளுடனும், போதகங்களுடனும் தேவனுடைய குணத்துடனும், கிறிஸ்துவின் ஈடுபலியுடனும், உண்மையுடனும், தேவன் சார்பாகவும், கிறிஸ்து சார்பாகவும், சபை சார்பாகவும், உலகம் சார்பாகவுமுள்ள வேதகமத் திட்டங்களுடனும் இணக்கமானவைகளாகவோ, இணக்கமில்லாதவைகளாகவோ இருக்கின்றனவா என்று அறிய அவர்கள் அவைகளை ஊக்கமாய்க் கற்றுக்கொள்ளவும் சோதிக்கவும் வேண்டும். இந்த ஏழு காரியங்களுடனும் இணக்கமாயிருக்கின்றன என்று நிரூபிக்கப்பட்ட அப்படிப்பட்ட காரியங்களை மட்டும் கர்த்தருடைய ஜனங்கள் பெற்றுக்கொள்ள சம்மதிக்க வேண்டும். தேவனுக்கு உத்தமனென்றுத் தெரிந்திருக்கிற ஊழியக்காரனாக இருக்க வேண்டுமானால், இப்படிப்பட்ட ஊக்கமாய்க் கற்றுக் கொள்ளுதலும், சோதிப்பதும் அவசியமாயிருக்கிறது. அதன் பலனாய் வாக்குவாதத்தில் மறுத்துரைப்பவர்களின் முன் தோல்வியின் வெட்கத்தினால் நம்முடைய தலைகளை ஒருபோதும் தொங்கவிட வேண்டிய அவசியமிராது. ஒரு விஷயத்தை ஊக்கமாகக் கற்றுக்கொள்ளுவதும், சோதிப்பதும் தனித்த உபதேசங்கள், கட்டளைகள், வாக்குத்தத்தங்கள், புத்திமதிகள், தீர்க்கதரிசனங்கள், சரித்திரங்கள், அடையாளங்கள் இவைகளின் தெளிவான சரியான கருத்துக்களை நமக்குக் கொடுத்தும் அவைகளை உபயோகிக்க நமக்குத் திறமையைக் கொடுத்தும் தேவனுடைய வார்த்தையின், ஒரு விஷேச அம்சத்தை மற்றதொரு அதிகதிகமாக சரியானபடி பேதம் கண்டுபிடிக்க நம்மை ஏதுவாக்கும். **-P 34, 175.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யோசு 1.8, 2நாளா 29.11, ஏசா 40.9, 52.11, 57.14, எரே 1.7,8,17-19, எசே 2.6-8, 3.8-10, 17-21.27, மத் 7.6, 10.7,11-13,16,25,27,28, 20.25-28, 28.19,20, யோவா 21.15-17, அப் 20.28, ரோம 12.6-8, 1கொரி 4.1,2, 9.16,17, 2கொரி 1.24, 4.1,2,5, 1தீமோ 1.3,4,11,18,19, 4.6,7,12-16, 2தீமோ 4.2,5.**

**கோபுர வாசிப்பு : Z 14, 232 (R 5511).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் சத்தியத்துக்கு ஊழியம் செய்தேனா? எப்படி? ஏன்? எந்தர்ச் சந்தர்ப்பங்களில்? உதவி செய்ததும் இடையூறாக இருந்ததும் எவை? பலன்கள் எவை?**